CAREERINDIA

# ಕರ್ನಾಟಕ ಶಾಲಾ ಪರೀಕ್ಷೆ ಮತ್ತು ಮೌಲ್ಯನಿರ್ಣಯ ಮಂಡಲಿ
**ಮಲ್ಲೇಶ್ವರಂ, ಬೆಂಗಳೂರು – 560 003**

**KARNATAKA SCHOOL EXAMINATION AND ASSESSMENT BOARD**
**Malleshwaram, Bengaluru – 560 003**

## 2024-25ರ ಎಸ್.ಎಸ್.ಎಲ್.ಸಿ. ಮಾದರಿ ಪ್ರಶ್ನೆಪತ್ರಿಕೆ-1
## S.S.L.C. MODEL QUESTION PAPER-1 – 2024-25

**ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು**

**Subject : First Language — TAMIL**

ವಿಷಯ ಸಂಕೇತ : **10-T** Subject Code : **10-T**

ಸಮಯ : 3 ಗಂಟೆ 15 ನಿಮಿಷಗಳು ] [ Time : 3 Hours 15 Minutes

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : **100** ] [ Max. Marks : **100**

www.careerindia.com

---

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் வினாக்கள் 45-ஐ கொண்டுள்ளது.

2. வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.

3. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.

4. மாணவர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.

[ Turn over

CAREERINDIA



**I. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக :** **6 × 1 = 6**

1. செய்யுளில் இரண்டு சீர்களைக் கொண்டது

   (A) சிந்தடி (B) அளவடி

   (C) குறளடி (D) நெடிலடி

2. சொற்கள் பல அடுக்கி வந்து பொருள் தருவது

   (A) இரட்டைத் கிளவி (B) அடுக்குத் தொடர்

   (C) வினைத் தொகை (D) பண்புத் தொகை

3. வெற்றி பெற்ற வீரனைப் புகழ்ந்து பாடுவது

   (A) பாடாண் திணை (B) வெட்சித் திணை

   (C) வஞ்சித் திணை (D) உழிஞைத் திணை

4. பாண்டிய மன்னர்களின் தலைநகரம்

   (A) தஞ்சாவூர் (B) திருச்சி

   (C) கரூர் (D) மதுரை

5. திருவாசகத்தை எழுதியவர்

   (A) திருஞான சம்பந்தர் (B) திருநாவுக்கரசர்

   (C) சுந்தர மூர்த்தி நாயனார் (D) மாணிக்கவாசகர்

www.careerindia.com

CAREERINDIA



6. செய்யுள் உறுப்புகள்

(A) 5 (B) 4

(C) 6 (D) 7

**II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை ஏற்ற சொல்லால் நிரப்புக : 4 × 1 = 4**

7. காக்கை பகலில் வெல்லும் கூகையை;

கூகை இரவில் வெல்லும் : .......................... .

8. நேர் + நேர் = தேமா;

நிரை + நேர் : .......................... .

9. செய்யுளில் அடிதோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை;

செய்யுளில் அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது : .................. .

10. தென்னங்: கீற்று;

பனை : .......................... .

**III. ஒரு தொடரில் விடை தருக : 7 × 1 = 7**

11. யந்திரங்களாக மாறுகிறவர்கள் எதை நோக்கமாகக் கொண்டு வாழ்கிறார்கள் ?

12. இலங்காவித் தீவுகள் எந்த நாட்டின் ஒரு பகுதி ?

13. கிராமத்தினர் பெயர் சொல்லி அழைத்த பறவைகள் யாவை ?

14. ஆறுகால் தும்பி என்ன செய்தது ?



www.careerindia.com

CAREERINDIA



15. உரிச்சொல் என்றால் என்ன ?

16. மாணிக்கவாசகர் சிவனை எவ்வுருவில் தோன்றுவதாய்க் கூறுகிறார்?

17. நீ எத்தகைய எண்ணத்தைக் கூடு என்கிறார் நாமக்கல் கவிஞர் ?

**IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடைதருக : 10 × 2 = 20**

18. மகன் தந்தைக்கு செய்யும் உதவி யாது ?

19. இளையான் குடி மாறர் தபோதனரை வரவேற்று உபசரித்ததை விளக்குக ?

20. பாணன் தான்கொண்டு வந்த பரிசுப்பொருள்கள் யாதென்பதற்குக் கூறிய முதல் மூன்று சொற்கள் யாவை ?

21. ஈரோடு தமிழன்பன் எதனை, களாவைவிட இனிது என்கிறார் ?

22. நம் தெய்வீகக் கதைகள் உணர்த்தும் உண்மை யாது ?

23. பாரதிதாசன் கடுகு உள்ளம் கொண்டவர் என்று யாரைக் குறிப்பிடுகிறார் ?

24. கி. ராஜநாராயணன் எந்தக் காலம் திரும்பி வந்துவிட்டதாகக் கூறுகிறார்? ஏன் ?

25. விடுகதை என்பதை விளக்குக ?

26. பம்பன் இயற்றிய நூல்கள் யாவை?

27. ஆசிரியப்பாவின் இலக்கணத்தைக் கூறுக

www.careerindia.com

CAREERINDIA



**V. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக : 4 × 3 = 12**

28. அசோக வனத்தில் சீதை இருந்த நிலையை அனுமன் எவ்வாறு விளக்கினான்?

29. புறநானூற்றுப் பாடலில் தாய்தந்தை, கொல்லன் அரசன் மற்றும் மகன் செய்ய வேண்டிய கடமைகளை பொன்முடியார்ர வழி நின்று விளக்குக.

30. பாரதிதாசன் யாருக்கு என்ன புகழாரம் சூட்டுகிறார் ?

31. கிராமத்துப் பெண்குழந்தைத் தொழிலாளர்கள் பற்றி

கி. ராஜநாராயணன் என்ன கூறுகிறார் ?

**VI. குறிப்பு வரைக : 2 × 3 = 6**

32. திரிகடுகம்.

33. கவியரசர் கம்பர்

**VII. கீழ் வரும் அணியைச் சான்றுடன் விளக்குக : 1 × 3 = 3**

34. பின் வருநிலை அணி.

**VIII. இடம் சுட்டிப் பொருள் விளக்குக : 3 × 3 = 9**

35. "கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்..... "

36. ‘‘எம் தமிழ்ப் பாவையைச் சுமந்து செல்லுங்கள்’’

37. அறத்தான் வருவதே இன்பம்

www.careerindia.com

CAREERINDIA



**IX. கீழ் வரும் பழமொழியை விளக்குக : 1 × 3 = 3**

38. ''தவளைத் தன்வாயால் கெடும்''

*அல்லது*

''ஞாயிற்றைக் கை மறைப்பார் இல்''

**X. அடிபிறழாமல் எழுதுக : 1 × 4 = 4**

39. ''சோதியாய்த் தோன்றும் என வரும்'' திருவாசகப் பாடல்

*அல்லது*

''பள்ளம் மேடுள்ள.....'' என வரும் பட்டுக்கோட்டையார் பாடல்

**XI. எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருக : 2 × 4 = 8**

40. இலட்சியம் பற்றி வைரமுத்து கூறும் கருத்துக்களைச் சுருக்கி வரைக.

41. திரு. வி.க. அறிவுத்திட்பம் வாய்ந்தவர் என்பதை உணர்த்துக.

*அல்லது*

நாம் இயற்கையின் சமநிலையை எவ்வாறு கெடுக்கிறோம் ?

www.careerindia.com

CAREERINDIA



**XII. கீழ்வருவனவற்றை விளக்கி எழுதுக : 1 × 4 = 4**

42. தனிமைச் சுவையுள்ள சொல்லை எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங் கண்ட தில்லை
நனியுண்டு நனியுண்டு காதல்-தமிழ்
நாட்டினர் யாவர்க்குமே தமிழ்மீதில்

*அல்லது*

பசியால் மடிந்தோர் படிக்கல் சுமந்தோர்
வதைத்துச் சிதைந்தோரும் என்மக்களே
மாளிகை எடுத்தோர் மாடங்களைக் கட்டியோர்
தாளடிக்கீழ் சிக்கியோரும் என் மக்களே

**XIII. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக :**

**1 × 4 = 4**

43. மு. வரதராசன் வட ஆற்காடு மாவட்டத்தில் 1912-ல் பிறந்தார் இவரை மு. வ. என்று இலக்கிய உலகம் அன்போடு அழைத்தது. அவர் 1953-ம் ஆண்டு தமிழ் வித்வான் தேர்வில் மாநில அளவில் முதலிடம் பெற்று திருப்பனந்தாள் ஆதீனம் அவர்களிடம் ஆயிரம் ரூபாய் பரிசு பெற்றார். 1961-ஆம் ஆண்டுவரை சென்னை பச்சையப்பன் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணி புரிந்தார். 1971-ல் மதுரை காமராஜர், பல்கலைக் கழகத்தின் துணை வேந்தரானார். இவருக்கு அரசியலில் குரு, திரு.வி.க ஆவார்.



www.careerindia.com

CAREERINDIA



மு.வ. வின் படைப்புகள் சமூக சிந்தனைகளைக் கொண்டதாக இருந்தன. கரித்துண்டு, கள்ளோ காவியமோ, கயமை, அல்லி நெஞ்சில் ஒரு முள், அகல் விளக்கு போன்றவை புகழ்பெற்ற நூல்கள் ஆகும். இவரது படைப்பான ''தமிழ் இலக்கிய வரவாறு'' சாகித்ய அகாடமி விருது பெற்றன. இவரது காலத்தில்தான் தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரும் வாழ்ந்தார். இவர்கள் இருவரையும் தமிழகம் போற்றிக் கொண்டாடியது.

வினாக்கள்

a) மு. வ. அவர்கள் வகித்த பதவிகள் யாவை ?

b) மு. வ அவர்கள் எழுதிய நூல்கள் யாவை ?

**XIV. மடல் எழுதுக :** **1 × 5 = 5**

44. உன் பிறந்தநாள் விழாவிற்கு வருமாறு நண்பனுக்கு கடிதம் எழுதுக

***அல்லது***

நீ வசிக்கும் தெருவில், தெருவிளக்கு அமைத்துத் தருமாறு நகராட்சி ஆணையருக்கு கடிதம் வரைக.

**XV. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு இருபது வரிகளுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக:** **1 × 5 = 5**

45. இன்றையச் சூழலில் கல்வியின் பயன்.

***அல்லது***

சுற்றுப் புறச் சூழல்

www.careerindia.com